1990 ஏப்ரல் 26]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 8359 எதிர்பாராத விபத்துகளில் மரணம் அடையும் மாட்டு வண்டித் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு நிவாரண உதவித் தொகை பற்றிய கேள்வி. . . . விடை கிடைத்து விட்டதா? இது ஒரு "accident" தானே! (சிரிப்பு)

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : துணைத் தலைவர் அவர்களே, சிறு விபத்து பொறுத்தருளக் கேட்டுக்கொள்கிறேன்.

மாட்டுவண்டித் தொழிலாளர் குடும்பங்களுக்கு நிவாரண உதவித் தொகை

8359 திரு. மெ. ஆண்டி அம்பலம் :
திருமதி ரமணி நல்லதம்பி :
மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) எதிர்பாரா விபத்துகளினால் மரணமடையும் மாட்டு வண்டித் தொழிலாளர் குடும்பங்களுக்கு நிவாரண உதவித் தொகையாக ரூ. 15,000 அளிக்க வேண்டுமென அரசுக்கு முறையீடு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசின் முடிவு என்ன ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

9–25 மணி

திரு. மெ. ஆண்டி அம்பலம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாட்டு வண்டிகளிலே இரவு நேரங்களிலே பிரயாணம் செய்கின்ற பொழுது அவர்கள் லாரி அல்லது பஸ் விபத்துக்களில் இறக்கின்றபொழுது, அவர்களுடைய குடும்பங்களுக்கு நிதி உதவி அளிக்கப்பட வேண்டுமென்பதுதான் எங்களுடைய கோரிக்கை. ஆனால், அமைச்சரவர்கள் ஒரே வார்த்தையிலே ஒன்றும் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். ஓதுவார் எல்லாம் உழுவான் தலைக்கடையில் என்ற அந்த விவசாயிகளை நம்பித்தான் நாமெல்லாம் இருக்கிறோம். அந்த அடிப்படையிலே அமைச்சரவர்கள் கருணை கூர்ந்து மீண்டும் பரிசீலனை செய்து அவர்களுக்கு நல்லதொரு உதவித் தொகை கிடைக்கச் செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு உறுப்பினர் இரக்க உணர்வோடும், கருணை உள்ளத்தோடும் கேட்ட கேள்விக்கு விளக்கமான பதிலை நான் தெரிவிக்க விரும்புகிறேன். 23–5–1989 ஆம் நாள் 471 நிதிநிலை எண் கொண்ட அரசாணை மற்றும் திருத்தப்பட்ட அரசின் கடிதங்களில் 32 வகைப்பட்ட தொழிலாளர்கள் தொழிலில் ஈடுபட்டு இருக்கும்போது இறந்தாலோ அல்லது காயம் உற்றாலோ அவர்களின் குடும்பத்திற்கு விபத்து நிவாரணச் சட்டத்தின் கீழ் நிவாரணம் வழங்குவதற்கு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அத்திட்டத்தின் கீழ் 32 பேர்கள் என்று நான் குறிப்பிட்டேன். அதை அவை தெரிந்து கொள்ள வேண்டுமென்று விரும்புமேயானால் நான் அந்த 32 பேர் பட்டியலையும் படிக்க விரும்புகிறேன். (குறுக்கீடு) ஏற்கனவே கொடுத்ததுதான். தையல் தொழிலில் ஈடுபட்டு இருக்கும்பொழுது ஏழை தொழிலாளர்கள் விபத்தில் இறந்தாலோ அல்லது காயம் உற்றாலோ மற்றும் வெள்ளையடிப்போர், வண்ணம் பூசுபவர் மற்றும் மின் வினைஞர்கள் தொழிலில் ஈடுபட்டிருக்கும்போது விபத்தில் இறந்தாலோ அல்லது காயமுற்றாலோ—ஆகிய பிரிவினர்களை இத்திட்டத்தின் கீழ் சேர்த்துக் கொள்வதற்கு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. (குறுக்கீடு) மாட்டு வண்டி ஓட்டுபவர்களுக்குச் சொல்கிறீர்களா? அதுவும் இதில் வருகிறது.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த மாட்டு வண்டி ஓட்டுபவர்களுடைய மூலதனமே மொபைல் மூலதனம்—அந்த வண்டி, அந்த இரண்டு மாடுகள்தான் அவர்களுடைய மூலதனம். ரோடுகளிலே விபத்துக்கள் ஏற்படுகின்ற காரணத்தினால், லாரி ஓட்டி வருகின்றவர்களும் தூக்கக் கலக்கத்திலேதான் இரவு நேரங்களிலே வருகிறார்கள், இந்த மாட்டு வண்டி வைத்திருப்பவர்களும் இரவிலே தூக்கக் கலக்கத்திலே வண்டி ஓட்டிக் கொண்டு இருக்கிறார்கள். அப்படிப்பட்ட சாலை விபத்துக்களிலே மாடுகள் இறந்து, வண்டிகள் நொறுங்கி, அந்த வண்டி ஓட்டியும் மடிந்து கிடக்கின்ற காட்சியையும் நாங்கள் காண்கின்றோம். அப்படிப்பட்டவர்களுக்கு மீண்டும் வண்டி வாங்குவதற்கும், மாடு வாங்குவதற்கும் வகை செய்கின்ற முறையிலே இழப்பை ஈடு செய்கின்ற வகையிலே 15,000 ரூபாயாவது குறைந்தபட்ச உதவித் தொகை வழங்க அரசு முன் வந்தால் அது நியாயமாக இருக்கும் என்று எண்ணுகிறேன். அதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மூலதனத்தைப் பெருக்குவதற்குமுயற்சிப்போம்.

திரு.சி. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாடுகளுக்குப் பதிலாக மனிதர்களே பலதொழில் நகரங்களிலே கை வண்டிஇழுத்துச் செல்லுகின்ற நேரங்களில் பல விபத்துக்களுக்கு

நகரப் பகுதிகளிலே ஆளாகின்ற நிலைமை இருக்கின்ற காரணத்தினால் அவர்களுக்கு இந்த விபத்தில் இறந்தால் உதவித் தொகை வழங்க அரசு முன் வருமா என அமைச்சரவர்கள் மூலம் விளக்கமாகப் பதிலை எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : இது விரிவான விளக்கத்திற்கு வழிவகை செய்கிறது என்று நான் கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்கள் அந்த விரிவான விளக்கம் தேவையில்லை என்று குறிப்பிட்டார்கள். இப்பொழுது தேவைப்படுகின்ற அளவிற்குக் கேள்வி கேட்கப்பட்டிருக்கின்ற காரணத்தால் . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஏற்கெனவே ஒரு பெரிய பட்டியலைப் போன மாதம் நீங்கள் அறிவித்திருக்கிறீர்கள்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : அறிவித்திருக்கிறேன். திருப்பியும் கேட்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவர் அன்றைக்கு ''absent''. (சிரிப்பு).

திரு. கே. ரமணி : வேண்டுமானால் லிஸ்டை வைத்து விடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மகிழ்ச்சி. நேரமும் மிச்சமாகும்.

திரு. சோ. அழகர்சாமி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு முக்கியமான கேள்வியாகும். இன்றைக்கு மாட்டு வண்டியை ஓட்டிச் செல்வது மட்டுமல்லாமல், அந்த வண்டிகளை இழுத்தும் செல்கிறார்கள் பல இடங்களிலே. பெண்கள்கூட அந்த வண்டிகளை இழுத்துச் செல்வதிலே பங்கு கொள்கிறார்கள். ஆகவே, அவர்கள் ஏதாவது விபத்திலே இறந்துவிட்டால், வண்டிகளை ஓட்டிச் செல்லும்பொழுது கீழே விழுந்தோ அல்லது வேறு விதமான காரணத்தினாலோ அந்த வேலைகளில் இருக்கும் பொழுது இறந்து விட்டால் அவர்களுக்கு நிவாரண நிதி இந்த பத்தாயிரம் ரூபாய்—மற்ற பேர்களுக்கெல்லாம் பத்தாயிரம் என்று அறிவித்திருக்கிறோம்—அது அவர்களுக்கு உண்டா என்பது தான் இந்த கேள்வி. அமைச்சர் அவர்கள் இல்லையென்று சொன்னார்கள், கேள்வி எழவில்லை என்று சொன்னார்கள். அவர்கள் இல்லையென்று சொன்னாலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 32 வகையைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு எப்படி நிவாரணம் 10,000 ரூபாய் அளிப்பதாக சொல்லி இருக்கிறார்களோ, அதைப்போல வருவாய்த் துறை

[1990 ஏப்ரல் 26

அமைச்சர் அவர்கள் இந்த கை வண்டி இழுக்கிற, அடித் தட்டிலே இருக்கிற, இந்த சாதாரணத் தொழிலாளர்களுக்கும் இறந்தால் 10,000 ரூபாய் வழங்கப்படும் என்ற உத்தரவை வழங்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்,

9–30 மணி

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : தலைவர் அவர்களே, அண்ணன் அழகர்சாமி அவர்கள் ஆண்களிலிருந்து பெண்களுக்கு வந்திருக்கிறார்கள். நான் அவர்களுக்கு உறுதி அளிக்கிறேன். (குறுக்கீடு) அவர்களுக்கும் சேர்த்து, இரண் டிற்கும் சேர்த்து அவர்களுக்கும் உதவி அளிக்கப்படும்.

திரு. கோ. வீரையன் : தலைவர் அவர்களே, மூலக் கேள்வியில் கேட்டிருப்பது இரவு நேரத்தில் வண்டி ஓட்டிச் செல்பவர்களுக்கு விபத்து ஏற்பட்டு, மாடும், வண்டியும், மனிதனும் சேர்த்து பாதிக்கப்பட்டால் அதற்கு நிவாரணம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று தான் — இதை இந்த அவையும், தமிழகமும் அமைச்சர் அவர்களிடமிருந்து தெரிந்து கொள்ள விரும்புகிறது. ஆனால், மாடும், வண்டியும் பாதிக்கப்பட்டால் நிவாரணம் வேண்டுமா என்று கேட்டால், மரத்தில் ஏறி விழுந்துவிட்டால் நாங்கள் நிவாரணம் அளிப்ப தற்கு அறிவித்து இருக்கிறோம் என்று கூறுவது எங்களுக்கு நிறைவு அளிக்க வில்லை. இப்படி மாடும், வண்டியும் பாதிக்கப்படும் போது, அப்படி திட்டத்தில் இல்லாவிட்டாலும் கூட, அரசு பரிசீலனை செய்து, அப்படி பாதிக்கப்பட்டவர் களுக்கு நிவாரணம் அளிக்க முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : தலைவர் அவர்களே, அவர்களுக்கு நிவாரணம் நீதிமன்றத்தில் கிடைக்கும். அரசும் அவர்களுக்கு உதவும். மரத்திலிருந்து விழுபவர்களுக்கு மட்டும் தானா, மாட்டு வண்டி இழுத்து செத்தால் அது கிடையாதா என்று கேட்டிருக்கிறார்கள். அனுதாபத்தோடு அரசு அதை கவனிக்கும். உறுப்பினர் குழப்பக் கூடாது. (சிரிப்பு).

கொளஞ்சியப்பர் மற்றும் விருத்தகிரீஸ்வரர் தேவஸ்தானங்களை இணைத்தல்

*1670 **திரு. கோ. பூவராகன் :**

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கொளஞ்சியப்பர் தேவஸ்தானத்தையும், விருத்தாசலம் விருத்தகிரீஸ்வரர் தேவஸ்தானத்தையும் இணைத்து, ஒரே நிர்வாகத்தில் கொண்டுவரும் திட்டம் அரசிடம் உள்ளதா ?